திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் திட்டத்தினை உடனடியாக நிறுத்தி, அவற்றை நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிக்க உத்தரவிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், என்றைக்குமே தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறையோடு இருப்பார்கள் என்று மீண்டும், மீண்டும் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.*

4. அறிக்கை அளித்தல்

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்களை தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியினைச் சேர்ந்த சில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 8–2–2013 அன்று பேரவையில் தாக்கியது தொடர்பான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிக்கையினை குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் தீர்மானம்

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

2013 மார்ச் 25]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியைச் சார்ந்த சில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)–வின்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

(தேசிய முற்போக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் புதிய தமிழகம் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

முற்பகல் 11–35

இதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது? தீர்மானம்தானே! தீர்மானத்தை இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) தீர்மானம் இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்போதுதான் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2013 மார்ச் 25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229(இ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையில் விவாதத்திற்கு ஒன்றுமே இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சொல்கிறேன். இதில் விவாதிப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால் இந்த அவையிலேதான் எல்லாமே நடந்தது. எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தோம். எவ்வளவு கீழ்த்தரமாக நடக்க முடியுமோ அவையில் அப்படி நடந்து கொண்டார்கள். வீடியோவில் யார் யார் இருக்கின்றார்கள், தவறு நடந்ததா இல்லையா என்று தெரிவதற்காகத்தான், அதை நான் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பினேன். வீடியோவில் என்ன இருந்தது? யார் யார் ஈடுபட்டார்கள்? தாக்கியவர்கள் யார் யார் என்பதைத் தெரிந்துகொண்டு அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவை உரிமைக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டது. அந்தக் குழுவிலே அனைத்துக் கட்சிகளினுடைய உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். உறுப்பினர்களுடைய கருத்துகளையெல்லாம் அந்தக் குழுவிலே ஏற்கெனவே நிறைய சொல்லியிருக்கிறீர்கள். சொன்னதற்குப் பின்னால்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் டாக்டர். நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே உரிமைக் குழுவிலே எல்லா உறுப்பினர்களும் விவாதித்துவிட்டுத்தான் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதிலே புதிதாகப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால் இது அவையிலே நடந்திருக்கிறது. வேறு எங்காவது நடந்திருந்தால் பரவாயில்லை. இந்த அவையை எவ்வளவு கேவலப்படுத்த வேண்டுமோ, அவ்வளவு கேவலமாக நடந்துகொண்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இது முதல் தடவை இல்லை. ஏற்கெனவே இரண்டு, மூன்று தடவை நடந்திருக்கிறது. போன

2013 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

தடவையெல்லாம் அவர்களுக்கு அவை உரிமைக் குழுவில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால், ஓர் உறுப்பினரைத் தாக்குவது என்பது இந்த அவையை கேவலப்படுத்துகின்ற செயல். (குறுக்கீடுகள்) எவ்வளவு கீழ்த்தரமாக நடக்க முடியுமோ, அவ்வளவு தூரம் இந்த அவையில் நடந்துகொண்டார்கள். இதற்கு நீங்கள் பரிந்து பேசக்கூடாது. இந்த அவையில் நடக்கவில்லை என்கிறீர்களா? (குறுக்கீடுகள்) சம்பவம் நடக்கவில்லை என்று சொல்கிறீர்களா? சரி என்று ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) திரு. சவுந்தரராசன், இதை சரி என்று ஏற்றுக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) தண்டனை அதிகம் என்பது பற்றியெல்லாம் பேச முடியாது. அதை உரிமைக் குழுவில் முடிவெடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன் ஆகிய 6 தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இன்றிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இக்காலத்தில் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. எனவே, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார்,

[பேரவைத் தலைவர்] [2013 மார்ச் 25

திரு. ஆர். அருள்செல்வன் ஆகியோர் அவையைவிட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலேயும் என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நான் நிற்கிறேன் இல்லையா? நீங்கள் உட்காருங்கள். வீடியோ காட்சியைப் பார்த்துத்தான், உங்களுடைய கட்சி உறுப்பினரும் பார்த்துத்தான் அடையாளம் காட்டினார்கள். அதனால் ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) வெளியேறுங்கள், வெளியேறுங்கள் இல்லையென்றால் வெளியேற்ற வேண்டி வரும். நீங்கள் வெளியேறவில்லையென்றால் நான் காவலர்களைக்கொண்டு வெளியேற்ற வேண்டி வரும். அவைக் காவலர்கள் ஆறு பேரையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11–40*

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன் ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. சக்கரபாணி, உங்களுக்கு என்ன பிரச்சினை? தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவர்களும் வெளியேறி விட்டார்கள். நீங்கள் உட்காருங்கள்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), புதிய தமிழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)